Cr.no-13/26

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109436

1. District மாவட்டம் அரியலூர் | PS: காவல்நிலையம் ஜெயங்கொண்டம் | Year: ஆண்டு 2026 | FIR No.: முத.அ. எண் 13 | Date: நாள் 23.09.2026

2. (i) Act சட்டம்: Prevention of Corruption | Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Act - 1988 as amended | Sections பிரிவுகள்: Sec - 7
(iii) Act சட்டம்: in 2018 | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 22.09.2026 | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை
Time Period : நேர அளவு | Time from நேரம் முதல் 15.00 | Time to : நேரம் வரை 20.00 மணியளவில்
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.09.2026 | Time : நேரம் 16.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol. II | Time : நேரம் 16.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சிமார் 29 km வடமேற்கில்
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி லட்சாட்சியர் அலுவலகம், கண்டாச்சிபுரம், எதிரில் மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : D. பாபு | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் | (g) Address : முகவரி அரியலூர் மாவட்டம் மேலப்பழுவூர் கிராமம் மேல தெரு, கடைசி வீடு.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. திரு. முத்து, 2150 ரூபாய் லஞ்சம், அலுவலக உதவியாளர், கண்டாச்சிபுரம் லட்சாட்சியர் அலுவலகம், கண்டாச்சிபுரம், எதிரில் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இயல

நீதிமன்றத்தில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23.09.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல்கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

23/9/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.09.2026 / 17.45

Name: பெயர் சி. சங்கரபாண்டி
Rank: நிலை .....No. எண் .....
தலைமை காவலர்
அனுப்புதல் மற்றும் தகவல்களை பிரிவு,
மாவட்டம், மதுரை (மாநகர்)

FIR வரிசை எண் 12 (FIR Contents)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 23.09.2026 16.00 மணிக்கு செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் A.சக்கரபாணி ஆகிய நான் விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் பொறுப்பு ஆய்வாளராக நிலைய ஆஜரில் இருந்தபோது, D.பாபு, விழுப்புரம் ஆய்வுக்குழு ஆய்வாளர், கடலூர் என்பவர் விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விபரம் பின் வருமாறு.

அனுப்புநர், D.பாபு, விழுப்புரம் ஆய்வுக்குழு ஆய்வாளர், கடலூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம். ந.க.எண்.ஆ.கு.2/508/2026, நாள்.23.09.2026. அய்யா, பொருள்: திடீர் கூட்டாய்வு - ஆய்வுக்குழு ஆய்வாளர், விழுப்புரம் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு - கண்டாச்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகம் - 22.09.2026-ம் தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - மேல்நடவடிக்கை மேற்கொள்ள புகார் அளிப்பது - தொடர்பாக. பார்வை. விழுப்புரம் ஆய்வுக்குழு ஆய்வாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண். ந.க.எண். ஆ.கு.2/508/2026, நாள்.22.09.2026. விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா மாற்றம், நில அளவை மற்றும் ரேஷன்கார்டு பெறுதல் ஆகிய அரசு சேவைகளுக்காக வரும் பொதுமக்களிடம் லஞ்ச பணம் வசூலிப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், ரகசியமாக கண்காணிக்கப்பட்டதில் அவ்வாறு லஞ்சமாக பணம் பெறுவது தெரியவந்ததின் அடிப்படையில் விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில், 22.09.2026-ம் தேதி மாலை சுமார் 15.00 மணிக்கு ஆரம்பித்து மேற்கொள்ளப்பட்ட இரு துறை திடீர் கூட்டாய்வின்போது நடைபெற்ற நிகழ்வின் விவரம் பின்வருமாறு. 22.09.2026-ந் தேதி மாலை சுமார் 15.00 மணியளவில் இருதுறை திடீர் கூட்டு ஆய்விற்காக, கண்டாச்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகம் சென்றபோது அவ்வலுவலகமானது கிழக்கு மேற்காக செல்லும் விழுப்புரம்-திருவண்ணாமலை சாலையில் வடக்கு பார்த்தவாறு அமைந்துள்ளது. தரை தளத்தின் முன் பகுதியில் மேற்கில் கிழக்கு பார்த்தவாறு இ-சேவை மையமும், கிழக்கில் வட்ட வழங்கல் பிரிவு அமைந்துள்ளது. அதனை தொடர்ந்து சமுக பாதுகாப்பு திட்டப்பிரிவும் அமைந்துள்ளது. இ-சேவை மையத்தை தொடர்ந்து வடக்கு பார்த்தவாறு நிலஅளவை பிரிவு அமைந்துள்ளது. முதல் தளத்தில் தெற்கு பார்த்தவாறு பொது பிரிவும், வடக்கு பார்த்தவாறு தேர்தல் பிரிவு மற்றும் வட்டாட்சியர் அறை உள்ளது. இரண்டாவது தளத்தில் பதிவறை மற்றும் கலந்தாய்வு கூடம் உள்ளது. கண்டாச்சிபுரம் வட்டாட்சியர் திருமதி.சாருமதி அவர்கள் விழுப்புரம் மாவட்ட ஆட்சியரின் விவசாயிகள் குறை தீர்ப்பு கூட்டத்திற்கு சென்றிருந்ததால் தலையிடத்து துணை வட்டாட்சியர் திரு.பாலசந்தர் என்பவரிடம் என்னையும் காவல் ஆய்வாளர் திரு.அ.சக்கரபாணி, சிறப்பு உதவி ஆய்வாளர் திருமதி.S.ஜூலி மார்க்ரேட் மேரி, த.கா.1918 திரு.K.பாலமுருகன், த.கா.111 திரு.M.மூர்த்தி, த.கா.695 திரு.P.ஞானவேல் ஆகியோர் அடங்கிய குழுவினரையும் அறிமுகப்படுத்திக்கொண்டு இரு துறை திடீர் கூட்டாய்விற்கு வந்துள்ள விவரம் குறித்து சொல்லப்பட்டு, சுய சோதனை செய்து காண்பித்த பின்பு இரு துறை கூட்டாய்வின்போது கடைபிடிக்கவேண்டிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டது. அலுவலகத்தில் ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் குறைவாக காணப்படுவது குறித்து தலைமையிடத்து துணை வட்டாட்சியரிடம் விசாரிக்க, அவர் மாதாந்திர பராமரிப்பு பணிக்காக காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை மின்தடை என்றும் அதனால் அலுவலக ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் குறைவாக காணப்படுவதாக தெரிவித்தார்.

கண்டாச்சிபுரம் வட்டாச்சியர் அலுவலகத்தில் இருந்த பட்டியலில் கண்ட அலுவலர்களை சோதனை செய்தபோது காணப்பட்ட விவரம் பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

வட்ட வழங்கல் பிரிவு

வ. எண்.	ஆஜரில் இருந்த அலுவலக ஆளிநர்கள்	வைத்திருந்த பணம்	குறிப்புரை
1.	R.பிரவின் குமார், வ-28, த/பெ.ராமலிங்கம். இளநிலை வருவாய் ஆய்வாளர், எண்.22 கணபதி நகர், சந்தப்பேட்டை, திருக்கோவிலூர். 9655491057	-	-
2.	K.ஸ்ரீவர்ஷினி வ-29 த/பெ.குமரவேல். முதுநிலை வருவாய் ஆய்வாளர், எண்.53 மகாத்மா தெரு, அஷ்டலட்சுமி நகர், திருக்கோவிலூர். 9159943198	Rs.50/-	இவர் போக்குவரத்து செலவிற்காக ரூ.50/- ஐ கொண்டுவந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது

சமூக பாதுகாப்பு திட்டம் பிரிவு

1	திரு.பி.திலீபன். வ-36 த/பெ.பிரகாஷ், இளநிலை வருவாய் ஆய்வாளர். எண்.116 பி-மில்லர் நகர், செங்கம் திருவண்ணாமலை மாவட்டம்.	ரூ.200/-	போக்குவரத்து செலவிற்காக பணம் கொண்டுவந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது

நிலஅளவை பிரிவு

1	திருமதி.ஜி.வேம்பு வ-44 த/பெ. கோபால், முதுநிலை வரைவாளர், எண்.6/106 முருகன் கோவில் தெரு, முகையூர் விழுப்புரம் மாவட்டம். 9385403998	ரூ.200/-	போக்குவரத்து செலவிற்காக பணம் கொண்டுவந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது.

முதல் தளம் - தேர்தல் பிரிவு

1.	திருமதி.மங்கள தேவி வ-44, க/பெ.செந்தில்குமார். தேர்தல் துணை வட்டாட்சியர், பிளாட் எண்.45,46 கௌதம் நகர், சாலமேடு, விழுப்புரம். 8056921963	ரூ.200/-	போக்குவரத்து செலவிற்காக பணம் கொண்டுவந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது.
2.	திருமதி.தரணி வ-42. த/பெ.மணி மண்டல துணை வட்டாட்சியர், எண்.238 அன்னை நகர், M -குச்சி பாளையம், கோளியனூர், விழுப்புரம் மாவட்டம்.	ரூ.300/-	தனது கை செலவிற்காக பணம் கொண்டுவந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது
3.	திருமதி.சங்கீதா. வ-37. த/பெ.பாலகுரு, முதுநிலை வருவாய் ஆய்வாளர், எண்.2 கோவிந்தசாமி தெரு, MGR தெரு, சிட்லபாக்கம், சென்னை 9176143847.	ரூ.70/-	கை செலவிற்காக பணம் கொண்டுவந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது.

முதல் தளம் - பொது பிரிவு

1	திரு.பாலசந்தர், வ-57 த/பெ.சிவமணி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், எண்.137, பாண்டியன் நகர், விழுப்புரம். 9791920959	ரூ.340/-	சாப்பாடு செலவிற்காக பணம் கொண்டுவந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது.
2.	திரு.வேல்முருகன், வ-32 த/பெ.ராமசாமி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், எண்.5 AMK மஹாறால், கிருஷ்ணா லேஅவுட் அருகில், விழுப்புரம். 8825581251	ரூ.500/-	போக்குவரத்து செலவிற்காக பணம் கொண்டுவந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது.
3.	செல்வி.எழிலரசி, வ-24, த/பெ.ஆதிகேசவன், தட்டச்சர், எண்.342, வி.கொளத்தூர், விழுப்புரம். 7806811821,	ரூ.100/-	போக்குவரத்து செலவிற்காக பணம் கொண்டுவந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது.
4.	திரு.மூர்த்தி, வ-50, த/பெ.அம்மாசி, அலுவலக உதவியாளர், வட்ட வழங்கல் பிரிவு, பகராண்மை பொதுபிரிவு, முருகன் கோவில் தெரு, ஆற்காடு, கண்டாச்சிபுரம் தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம். 9791325049.	-	இவர் தற்போது அலுவலக உதவியாளர் வட்ட வழங்கல் பிரிவு பகராண்மை பொதுபிரிவு, கண்டாச்சிபுரம் வட்டாட்சியரின் அலுவலக உதவியாளராக கடந்த 2024-ம் ஆண்டு முதல் பணி செய்வதாக தெரிவித்தார். இவர் பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. இவரது G-Pay பரிவர்த்தனையை பார்க்க கடந்த 11.07.2026 முதல் 04.09.2026 வரையிலான காலத்தில் திருக்கோவிலூர் SBI வங்கி கணக்கு எண்ணுடன் இணைக்கப்பட்ட G-pay கணக்கில் சுமார் Rs. 80,650/- பல்வேறு வங்கி கணக்குகளில் இருந்து சந்தேகத்திற்கு இடமான வகையில் இவரது வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இதற்கு தக்க முகாந்திரம் கூறவில்லை.

இரண்டாம் தளம் -பதிவறை (Record Room)

1	திரு.பாஸ்கர் ஜான் பால், வ-40 த/பெ.மரிய சூசை, பதிவறை எழுத்தர் பெரிய கோவில் தெரு, கக்கனூர், விக்கிரவாண்டி வட்டம். 9092996618	ரூ.700/-	வீட்டிற்கு மளிகை பொருள் மற்றும் போக்குவரத்து செலவிற்காக பணம் கொண்டுவந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது

கண்டாச்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்த தனி நபர்களை சோதனை செய்த விபரம் பின்வருமாறு.

1.	திரு.குப்பன், வ-[illegible] த/பெ.பெருமாள், எண்.94 மாரியம்மன் கோவில் தெரு, ஆலம்பாடி, கண்டாச்சிபுரம் தாலுக்கா. 8883754111	ரூ.65/-	இவர் செங்கமேடு VAO ஐ பார்த்து EB connection பெறுவதற்கான படிவத்தில் கையொப்பம் பெற வந்ததாக தெரிவித்தார். மேற்படி பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.
2.	திரு.பாஸ்கரன், வ-31 த/பெ கணபதி, சித்தாமூர் தெரு, காரணை பெரிச்சானூர், கண்டாச்சிபுரம் தாலுக்கா. 8148173463	ரூ.250/-	இவர் தனது ஆதார் கார்டு-ல் முகவரி மாற்றம் செய்ய இ-சேவை மையம் வந்ததாக தெரிவித்தார். தனது கை செலவிற்கு வைத்திருந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

3	திரு.சிவசங்கரன், வ-37 த/பெ.கருணாநிதி, புதிய காலனி, காடகனூர், கண்டாச்சிபுரம் தாலுக்கா. 8270897057	-	அரசு கல்லாங்குத்து நிலத்தை பட்டா மாற்றம் செய்ய விண்ணப்பித்ததாகவும் அதன் நிலை குறித்து அறிய வந்ததாகவும் தெரிவித்தார்.
4.	திரு.ராமமூர்த்தி, வ-39 த/பெ.சண்முகம், பிள்ளையார் கோவில் தெரு, கோட்டமருதூர், கண்டாச்சிபுரம் தாலுக்கா. 7094005387	ரூ.300/-	இவர் தனது மகளின் பிறப்பு சான்றிதழில் பெயர் திருத்தம் செய்ய இ-சேவை மையம் வந்ததாக தெரிவித்தார். தனது கை செலவிற்கு வைத்திருந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.
5.	திரு.சேகர், வ-60 த/பெ.சிங்காரவேலு, கெங்கையம்மன் கோவில் தெரு, புலிக்கல், வீரபாண்டி, கண்டாச்சிபுரம் தாலுக்கா. 9943578347.	ரூ.20/-	நத்தம் புறம்போக்கு நிலத்தை பட்டா மாற்றம் செய்ய விண்ணப்பித்ததாகவும் அதன் நிலை குறித்து அறிய வந்ததாகவும் தெரிவித்தார். மேற்படி பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.
6.	திரு.கோபிநாத், வ-47, த/பெ.சிட்டிபாபு, மூட்டைகார தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை மாவட்டம். 7418839799	ரூ.305/-	இவர் தனது மகளின் பிறப்பு சான்றிதழில் பெயர் திருத்தம் செய்ய இ-சேவை மையம் வந்ததாக தெரிவித்தார். தனது கை செலவிற்கு வைத்திருந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

மேலும், இவ்வலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர் உதவியுடன், வட்டாட்சியர் அலுவலக அறை மற்றும் வெளிப்புற பகுதிகளை சோதனை செய்தபோது கைப்பற்றக்கூடிய பணமோ பொருளோ ஏதும் இல்லை. இவ்வலுவலகத்தில் தனி நபர் பணம் இருப்பு பதிவேடு இல்லை. மேலும் திடீர் கூட்டாய்வின்போது கீழேகண்ட சான்றொப்பமிட்ட ஆவணங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. கண்டாச்சிபுரம் வட்டாட்சியர் அலுவலக செப்டம்பர்/2026 மாத வருகைப்பதிவேடு (3 தாள்கள்). கண்டாச்சிபுரம் வட்டாட்சியர் அலுவலக சமூக பாதுகாப்பு திட்டப் பிரிவு செப்டம்பர்/2026 மாத வருகைப்பதிவேடு (1 தாள்). திடீர் கூட்டாய்வின்போது கண்டாச்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்த அலுவலக உதவியாளர் திரு.[illegible] என்பவருடைய G-Pay Account-ல் சந்தேகத்திற்கு இடமான பணபரிவர்த்தனை ரூ.80,650/- காணப்பட்டது. தனி நபர்களின் விசாரணை முடித்து, மீண்டும் விசாரணையின் போது ஆஜராகுமாறு அறிவுறுத்தி அனுப்பிவைக்கப்பட்டனர். திடீர் கூட்டாய்வின்போது எவ்விதமான பொருட்கள் மற்றும் ஆவணங்களுக்கும் சேதம் ஏற்படுத்தபடவில்லை. மேலும் கூட்டாய்வின்போது கண்டாச்சிபுரம் அலுவலகத்தில் இருந்த ஊழியர்களுக்கோ, மேலும் அலுவலகத்தில் இருந்த பொதுமக்களுக்கோ உடலளவிலோ, மனதளவிலோ எந்தவித துன்புறுத்தலும் ஏற்படுத்தவில்லை. பெண் அலுவலர்கள் பெண் காவலர் மூலமாக தனி அறையில் சோதனை செய்யப்பட்டனர். இந்த இரு துறை திடீர் கூட்டாய்வு இன்று 22.09.2026 தேதி மாலை 15.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு சுமார் 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி, திடீர் கூட்டாய்வின்போது, கண்டாச்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்தவர்கள் மற்றும் அவர்களுடைய கைபேசிகளை ஆய்வு செய்தபோது, G-Pay Account-ல் சந்தேகத்திற்கு இடமான பணபரிவர்த்தனை ரூ.80,650/- காணப்பட்ட கண்டாச்சிபுரம் வட்டாட்சியர் அலுவலக உதவியாளர் திரு.[illegible] என்பவர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். Sdxxx D.பாபு, ஆய்வுக்குழு ஆய்வாளர், விழுப்புரம். இணைப்பு - 1) ஆய்வுக்குழு ஆய்வாளர், விழுப்புரம் அவர்களின் செயல்முறை ஆணை எண். ந.க.எண்.ஆ.கு.2/508/2026, நாள்.22.09.2026. 2) கண்டாச்சிபுரம் வட்டாட்சியர் அலுவலக

செப்டம்பர்/2026 மாத வருகைப்பதிவேடு (3 தாள்கள்). 3) கண்டாச்சிபுரம் வட்டாட்சியர் அலுவலக சமூக பாதுகாப்பு திட்டப் பிரிவு செப்டம்பர்/2026 மாத வருகைப்பதிவேடு (1 தாள்).

ஐயா,

மேலே கண்ட புகாரினை பெற்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.13/AC/2026/VPM பிரிவு 7 of PC Act, 1988 as amended in 2018 ஆக இன்று 23.09.2026 16.00 மணிக்கு வழக்கு பதிந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மற்றும் செயல்முறை ஆணை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை மாண்பமை விழுப்புரம் மாவட்ட ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றத்திற்கும் இதர நகல்களை உரிய நடவடிக்கைக்காக உயரதிகாரிகளுக்கும் முறையே அனுப்பப்பட்டது.

23/09/2026

(அ.சக்கரபாணி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு,
செங்கல்பட்டு,
விழுப்புரம் (பொறுப்பு)